சுகாதார அமைச்சு | கல்வி அமைச்சு

Ontario

# பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பகத்தில் COVID-19 சோதித்தறியும் முறைமை

பதிப்பு 5: மே 31, 2021

**மாணவர்கள் அல்லது பிள்ளைகள் பாடசாலை மற்றும் சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்வதற்கு முன்னர் ஒவ்வொரு நாளும் COVID-19 சோதனை செய்யப்பட வேண்டும். பெற்றோர்/பாதுகாவலர்கள் ஒரு பிள்ளையின் சார்பாக இதை நிரப்பலாம்.**

திகதி (mm-dd-yyyy) ________________

## சோதித்தறிதலுக்கான கேள்விகள்

1. **கடந்த 14 நாட்களில், மாணவர்/பிள்ளை கனடாவுக்கு வெளியே பயணம் செய்திருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை
   *தனிமைப்படுத்தப்பட வேண்டிய தேவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டால், "இல்லை" என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.*
2. **மாணவர்/பிள்ளை தற்போது தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டில் தங்க வேண்டும்) என்று ஒரு மருத்துவர், சுகாதார வழங்குநர் அல்லது பொது சுகாதாரப் பிரிவு உங்களிடம் கூறியுள்ளதா?** ☐ ஆம் ☐ இல்லை
   *ஒரு நோய்ப்பரம்பல் அல்லது தொடர்புத் தடமறிதல் இதற்கான காரணமாக இருக்கலாம்.*
3. **COVID-19 தொற்றைத் தற்போது கொண்டுள்ள ஒருவரின் "நெருங்கிய தொடர்பாளர்" எனக் கடந்த 14 நாட்களில், மாணவர்/பிள்ளை அடையாளம் காணப்பட்டுள்ளாரா?** ☐ ஆம் ☐ இல்லை
4. **கடந்த 14 நாட்களில், தங்கள் செல்போனில் COVID எச்சரிக்கை அறிவிப்பை மாணவர்/பிள்ளை பெற்றுள்ளாரா?** ☐ ஆம் ☐ இல்லை
5. **இந்த அறிகுறிகளில் எதையாவது மாணவர்/பிள்ளை தற்போது அனுபவிக்கின்றாரா?**
   *புதிதான, மோசமடைந்து கொண்டிருக்கும் மற்றும் ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றதான எதனையும்/அனைத்தையும் தெரிவு செய்யவும்.*

---

**காய்ச்சல் மற்றும்/அல்லது குளிருணர்ச்சி** ☐ ஆம் ☐ இல்லை
*37.8 டிகிரி செல்சியஸ்/100 டிகிரி பரனைட் அல்லது அதற்கு மேற்பட்ட வெப்பநிலை*

---

**இருமல் அல்லது குரைப்பது போன்ற இருமல் (croup)** ☐ ஆம் ☐ இல்லை
தொடர்ச்சியான, வழக்கத்தை விட அதிகமாக ஏற்படும், சுவாசிக்கும்போது ஒரு விசில் சத்தம் போடுவது போன்ற இருமல் (ஆஸ்துமா, தொற்றுநோய்க்குப்-பின்னர் எதிர்மாறாகத் தொழிற்படும் சுவாசப்பாதைகள் அல்லது ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது)

---

**மூச்சுத் திணறல்** ☐ ஆம் ☐ இல்லை
மூச்செடுப்பதில் சிரமம்,ஆழமாக சுவாசிக்க முடியாதிருப்பது (ஆஸ்துமா அல்லது அவர்களுக்கு ஏற்கனவே உள்ள பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது)

---

**சுவை அல்லது வாசனையில் குறைவு அல்லது இழப்பு** ☐ ஆம் ☐ இல்லை
பருவகால ஒவ்வாமைகள், நரம்பியல் கோளாறுகள் அல்லது ஏற்கனவே உள்ளதாக அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது

---

**தொண்டையில் புண் அல்லது விழுங்குவதில் சிரமம்** ☐ ஆம் ☐ இல்லை
விழுங்கும்போது வலித்தல் (பருவகால ஒவ்வாமைகள், அமிலம் காரணமாக நெஞ்செரிவு அல்லது ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது)

---

**மூக்கால் ஒழுகுதல் அல்லது மூக்கடைப்பு** ☐ ஆம் ☐ இல்லை
பருவகால ஒவ்வாமைகள், குளிர்ந்த காலநிலையில் வெளியில் இருப்பது அல்லது அவர்களுக்கு இருப்பதாக ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது

| | | |
|---|---|---|
| **தலைவலி**<br>அசாதாரணமானது, நீண்ட காலம்- நீடிப்பது (பதற்றம்-காரணமாக ஏற்படும் தலைவலி, நாட்பட்டஒற்றைத் தலைவலி, அல்லது அவர்களுக்கு இருப்பதாக ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது)<br>**மாணவர்/பிள்ளை கடந்த 48 மணி நேரத்தில் COVID-19 தடுப்பூசி பெற்றிருந்து, தடுப்பூசிக்குப் பின்னர் தொடங்கிய லேசான தலைவலி எனில், "இல்லை" என்பதைத் தெரிந்தெடுக்கவும்** | ☐ ஆம் | ☐ இல்லை |
| **குமட்டல், வாந்தி மற்றும் / அல்லது வயிற்றுப்போக்கு**<br>வயிற்றெரிவுடன் குடல் நோய், பதட்டம், மாதவிடாய் காரணமாக ஏற்படும் வயிற்றுவலிகள் அல்லது அவர்களுக்கு இருப்பதாக ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது | ☐ ஆம் | ☐ இல்லை |
| **அதிக சோர்வு அல்லது தசை வலிகள்**<br>அசாதாரண, சோர்வு, ஆற்றல் இல்லாமை, சிசுக்களுக்குப் போஷாக்கின்மை (மனச்சோர்வு, தூக்கமின்மை, தைராய்டு செயலிழப்பு, திடீரென ஏற்பட்ட காயம் அல்லது அவர்களுக்கு இருப்பதாக ஏற்கனவே அறியப்பட்ட பிற காரணங்கள் அல்லது நிலைமைகளுடன் தொடர்பற்றது)<br>**மாணவர்/பிள்ளை கடந்த 48 மணி நேரத்தில் COVID-19 தடுப்பூசி பெற்றிருந்து, தடுப்பூசிக்குப் பின்னர் தொடங்கிய லேசான சோர்வு மற்றும்/அல்லது லேசான தசை வலி/மூட்டு வலி எனில், "இல்லை" என்பதைத் தெரிந்தெடுக்கவும்.** | ☐ ஆம் | ☐ இல்லை |

6. **மாணவர்/பிள்ளையுடன் ஒருமித்து வசிக்கும் எவராவது புதிதாக ஏதாவது COVID-19 அறிகுறிகளைத் தற்போது அனுபவிக்கின்றாரா மற்றும்/அல்லது அறிகுறிகளை அனுபவித்த பின்னர் சோதனை முடிவுகளுக்காகக் காத்திருக்கின்றாரா?** ☐ ஆம் ☐ இல்லை
அறிகுறிகளை அனுபவிக்கும் நபர் கடந்த 48 மணி நேரத்தில் COVID-19 தடுப்பூசியைப் பெற்றிருந்து, தடுப்பூசிக்குப் பின்னர் லேசான தலைவலி, சோர்வு, தசை வலிகள் மற்றும்/அல்லது மூட்டு வலி ஆகியன தொடங்கியிருந்தால், "இல்லை" என்பதைத் தெரிந்தெடுக்கவும்

## சோதித்தறியும் கேள்விகளின் முடிவுகள்

**! 1 இலிருந்து 3 வரையுள்ள கேள்விகளுக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை 14 நாட்கள் சுயமாகத்-தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசரநிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- **1 வது கேள்விக்கு "ஆம்"** என்று நீங்கள் பதிலளித்திருந்தால், பொது சுகாதாரப் பகுதியின் ஆலோசனையைப் பின்பற்றவும். உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை திரும்பச் செல்லலாம்.
- **3 வது கேள்விக்கு "ஆம்"** என்று நீங்கள் பதிலளித்திருந்தால், மாணவர்/பிள்ளைக்கு COVID-19 சோதனை செய்யப்பட வேண்டுமா என்பதையும் உள்ளடக்கிய ஆலோசனைகளை அல்லது ஒரு மதிப்பீட்டைப் பெறுவதற்காக மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளர் ஒருவருடன் பேசவும். எதிர்மறையான சோதனை முடிவு கிடைத்தாலும் கூட, 14 நாட்களின் பின்னரே பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை திரும்பச் செல்ல முடியும்.
  - றொறன்ரோ அல்லது பீல் போன்ற மாகாணத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நீங்கள் வசிப்பதாயின், சகோதரர்களும் மற்றும் உங்கள் வீட்டில் உள்ள மற்றவர்களும் 14 நாட்களுக்கு வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். உள்ளூர்ப் பகுதியிலுள்ள அபாய காரணிகளே இதற்கான காரணமாகும்.
  - ஒன்ராறியோவின் பிற பகுதிகளில் நீங்கள் வசிப்பதானால், உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனையோர் பாடசாலை, சிறுவர் பராமரிப்பகம் அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனால் அத்தியாவசியம்-அற்ற பிற காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது.
    மேலதிகத் தகவல்களுக்குப் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால் அல்லது தொற்று இருப்பதாகச் சோதித்தறியப்பட்டால், மேலதிகமான ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு, இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**! 2 வது கேள்விக்கு "ஆம்" என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை சுயமாகத்-தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- பொது சுகாதார ஆலோசனையைப் பின்பற்றவும். உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னர் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை திரும்பச் செல்லலாம்.
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால், மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- றொறன்ரோ அல்லது பீல் போன்ற மாகாணத்தின் குறிப்பிட்ட சில பகுதிகளில் நீங்கள் வசிப்பதாயின், சகோதரர்களும் மற்றும் உங்கள் வீட்டில் உள்ள மற்றவர்களும் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும். உள்ளூர்ப் பகுதியிலுள்ள அபாய காரணிகளே இதற்கான காரணமாகும்.

- நீங்கள் ஒன்ராறியோவின் பிற பகுதிகளில் வசிப்பதானால், உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனையோர் பாடசாலை, சிறுவர் பராமரிப்பகம் அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனாலும் அத்தியாவசியம்-அற்ற பிற காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது. மேலதிகத் தகவல்களுக்குப் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு. இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**4 வது கேள்விக்கு “ஆம்” என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை சுயமாகத்-தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) அத்துடன் மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- COVID-19 க்குச் சோதிக்கப்படுவதற்கு மதிப்பீட்டு மையம் ஒன்றுக்குச் செல்லவும்.
  - சோதனையின் போது அவர்களுக்கு எதிர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் இல்லை), அவர்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குத் திரும்பச் செல்லலாம்.
  - சோதனையின் போது அவர்களுக்கு நேர்மறையாகக் காட்டினால் (அவர்களுக்கு வைரஸ் உள்ளது), உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்பட்ட பின்னரே அவர்கள் திரும்பிச் செல்ல முடியும்.
- அவர்களுக்கு அறிகுறிகள் ஏற்பட்டால், மேலதிக ஆலோசனைகளுக்கு உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவு அல்லது மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளரைத் தொடர்பு கொள்ளவும்.
- உடன்பிறப்புகள் மற்றும் உங்கள் வீட்டிலுள்ள ஏனையோர் பாடசாலை, சிறுவர் பராமரிப்பகம் அல்லது வேலைக்குச் செல்லலாம், ஆனாலும் COVID எச்சரிக்கைச் சோதனை முடிவு எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவால் அனுமதிக்கப்படும் வரை, அத்தியாவசியம்-அற்ற வேறு காரணங்களுக்காக வீட்டை விட்டு வெளியேறக்கூடாது.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு.இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**5 அல்லது 6 வது கேள்விகளின் கீழ்க் குறிப்பிடப்பட்ட அறிகுறிகளில் எவற்றுக்காவது “ஆம்” என்று நீங்கள் பதிலளித்திருந்தால் பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்ல வேண்டாம்.**

- மாணவர்/பிள்ளை தனிமைப்படுத்தப்பட வேண்டும் (வீட்டிலேயே இருக்க வேண்டும்) மற்றும் சோதனை செய்யப்படுவதற்கு அல்லது மருத்துவ அவசர நிலைமை தவிர்ந்த வேறு எந்தக் காரணத்துக்காகவும் வெளியில் செல்லக்கூடாது.
- **5 வது கேள்விக்கு “ஆம்”** என்று நீங்கள் பதிலளித்திருந்தால், மாணவர்/பிள்ளைக்கு COVID-19 சோதனை செய்யப்பட வேண்டுமா என்பதையும் உள்ளடக்கிய ஆலோசனைகள் அல்லது ஒரு மதிப்பீட்டைப் பெறுவதற்காக மருத்துவர்/சுகாதாரப் பராமரிப்பாளர் ஒருவருடன் பேசவும்.
- **6 வது கேள்விக்கு “ஆம்”** என்று நீங்கள் பதிலளித்திருந்தால், அந்த நபர் எதிர்மறையான COVID-19 சோதனை முடிவைப் பெற்ற பின்னர், அல்லது உங்கள் உள்ளூர்ப் பொது சுகாதாரப் பிரிவினால் அனுமதிக்கப்பட்ட பின்னர் அல்லது அது வேறொரு நோய் எனக் கண்டறியப்பட்ட பின்னரே, பாடசாலை அல்லது சிறுவர் பராமரிப்பகத்துக்கு மாணவர்/பிள்ளை திரும்பிச் செல்ல முடியும்.
- மாணவர்/பிள்ளைக்கு அறிகுறிகள் தோன்றும் வரை அல்லது அவரவருக்குரிய தனிப்பட்ட சோதனைகள் எதிர்மறையாகக் காட்டும் வரை அல்லது உங்கள் பொது சுகாதாரப் பிரிவினால் அனுமதிக்கப்படும் வரை அல்லது அது வேறொரு நோய் எனக் கண்டறியப்படும் வரை, உங்கள் வீட்டிலுள்ள உடன்பிறப்புகள் அல்லது பிற நபர்கள் வீட்டிலேயே தங்கியிருக்க வேண்டும்.
- உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பாளரைத் தொடர்பு கொண்டு.இந்த முடிவு பற்றி அவர்களுக்குத் தெரிவிக்கவும்.

**கேள்விகள் அனைத்துக்கும் “இல்லை” என்று நீங்கள் பதிலளித்திருந்தால், உங்கள் பிள்ளை பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்துக்குச் செல்லக்கூடும், ஏனெனில் அவர்கள் COVID-19 தொற்றுக்கு உள்ளாகாமல் ஆரோக்கியமாக இருப்பதாகத் தெரிகின்றது. இந்த முடிவைப் பற்றி ஆசிரியர்களுக்குத் தெரியப்படுத்துவதற்கு உங்கள் பாடசாலை/சிறுவர் பராமரிப்பு வழங்குநரினால் உருவாக்கப்பட்டுள்ள நடைமுறையைப் பின்பற்றவும் (பொருந்துமாயின்).**

மாணவர்/பிள்ளை கடந்த 48 மணி நேரத்தில் COVID-19 தடுப்பூசியைப் பெற்றிருந்து, தடுப்பூசிக்குப் பின்னர் லேசான தலைவலி, சோர்வு, தசை வலிகள் மற்றும்/அல்லது மூட்டு வலி ஆகியன தொடங்கியிருந்தால், அத்துடன் வேறு அறிகுறிகள் எதுவும் இல்லாவிட்டால், அவர்களுக்குச் சரியாகப் பொருந்தக்கூடிய முகக்கவசம் ஒன்றைப் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்தில் இருக்கும் முழுநேரமும் அவர்கள் அணிந்திருக்க வேண்டும். உணவு அல்லது பானத்தை உட்கொள்வதற்கு மட்டுமே அவர்களின் முகக்கவசம் அகற்றப்படலாம், மேலும் அவர்களின் முகக்கவசம் அகற்றப்படும்போது, அவர்கள் மற்றவர்களிடமிருந்து குறைந்தது இரண்டு மீற்றர் தூரத்தில் இருக்க வேண்டும். அறிகுறிகள் மோசமடைந்து, 48 மணிநேரங்களைத் கடந்த பின்னரும் தொடர்ந்து கொண்டிருந்தால், அல்லது அவர்களுக்கு வேறு அறிகுறிகள் ஏற்பட்டால், அவர்கள் உடனடியாகப் பாடசாலை/சிறுவர் பராமரிப்பகத்தை விட்டு வெளியேறிச் சுய-தனிமைப்படுத்தப்பட்டு COVID-19 சோதனை செய்யப்பட வேண்டும்.

## ஒன்ராறியோ பொது சுகாதார நிறுவனம் - தொடர்புத் தடமறிதல்

**சுயவிருப்பத்தின் அடிப்படையிலேயே இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்கப்படுகின்றது.** இந்தத் தகவல்கள் தொடர்புத் தடமறிதலுக்காக மட்டுமே பொது சுகாதார அதிகாரிகளால் பயன்படுத்தப்படும். தகவல்கள் அனைத்தும் 28 நாட்களில் நீக்கப்படும்.

**திகதி:** ______________________

**பெயர்:** ______________________

**தொலைபேசி அல்லது மின்னஞ்சல்:** ______________________